புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஆகஸ்ட் 07, 2025 • புரட்சி 25 • முழக்கம் 34 • விலை ரூ.6.00



## *மனிதம்–அடையாளம்; ஜாதி–அவமானம்*

# மடியட்டும் ஆணவப் படுகொலைகள்

***ஜாதிப் பெருமைக்குள் புதையுண்டு கிடக்கும் ஜாதியவாதிகளே! உங்களிடம் சில கேள்விகள்:***

● ஜாதி என்ற அடையாளம் நாம் தேர்வு செய்ததா?

● படிப்பு, தொழில், வாழ்க்கையைத் தான் நாம் தேர்வு செய்கிறோம். அதேபோல் ஜாதியை நாம் தேர்வு செய்கிறோமா?

● ஒரு காலத்தில் நமது மூதாதையர்கள் பிறந்த ஜாதிக்கு ஒதுக்கப்பட்ட தொழிலை மட்டும் செய்து வந்தார்கள் இப்போது அந்த தொழில்களை நாம் செய்கிறோமா? இல்லை.

● முடி வெட்டுவது, துணி துவைப்பது, செருப்பு தைப்பது, மலம் அள்ளுவது, செக்கு ஆட்டுவதும் ஜாதிக்கான தொழில் என்ற நிலையை இப்போது நாம் பின்பற்றுகிறோமா? ஜாதியை உதறி விட்டு வேறு தொழில்களுக்கு மாறிவிட்டோமா இல்லையா? இவற்றில் எல்லாம் ஜாதியைக் கைவிடலாம்; ஆனால் திருமணத்தில் மட்டும் கட்டாயமாக ஜாதியைப் பின்பற்ற வேண்டுமா?

● மேல் ஜாதி, கீழ் ஜாதி, தீண்டப்படாத ஜாதி என்று நம்மைப் பிரித்தார்கள். கெட்ட ஜாதி, நல்ல ஜாதி என்று இழிவுபடுத்தினார்கள்; நான் ஏன் கீழ் ஜாதி என்று ஜாதியை எதிர்த்து நாம் கேள்வி கேட்கிறோம். இதில் ஜாதியை நாம் மறுக்கும் போது திருமணத்தில் மட்டும் நீடிக்க வேண்டுமா?

● நமது அண்ணனுக்கோ, தங்கைக்கோ, உடல்நலம் பாதிக்கப்பட்டால் பதறிப் போய் மருத்துவமனைக்கு ஓடுகிறோம். அங்கே குருதி அவசரமாக தேவைப்படும்போது நம்ம ஜாதிக்காரன் குருதியை மட்டுமே ஏற்றுக் கொள்வோம் என்று நாம் கூறுகிறோமா? இல்லை, சிகிச்சைக்கு ஜாதியை மறுக்கிறோம். ஆனால் திருமணத்தில் மட்டும் ஏற்க வேண்டுமா?

● இந்தியாவிலேயே உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. வேறு ஒரு உடலில் இருந்து உறுப்புகளை எடுத்து பாதிக்கப்பட்டவரின் உடலுக்குள் பொருத்த முடியும் என்று மருத்துவம் வளர்ந்திருக்கிறது. உறுப்புகளைப் பொருத்துவதற்கு உடல் உறுப்பு தேவைப்படும்போது அது எங்க ஜாதிக்காரர் உடல் உறுப்புகளாகவே இருக்க வேண்டும் என்று நாம் கூறுகிறோமா? இல்லை; இதில் எங்கே போனது ஜாதி?

● ஜாதிக்குள் வரன் தேவை என்று விளம்பரங்களைப் பார்த்து வரன் தேடிக் குடும்பத்தில் திருமணத்தை முடித்து விடுகிறோம். குடும்பத்தில் பிரச்சனை வரும்போது மணமுறிவு ஏற்பட்டு மகளுக்கோ, மகனுக்கோ இரண்டாவது திருமணம் செய்ய விரும்பினால் சொந்த ஜாதிக்காரர்களின் குடும்பத்திலிருந்து ஜாதியைக் காப்பாற்ற உறவு கொள்ள வருகிறார்களா?

● இரண்டாம் திருமணம் செய்ய விரும்பும்போது "எந்த ஜாதியாக இருந்தாலும் பரவாயில்லை; நல்லவர்களாக இருந்தாலே போதும்" என்று ஜாதியை ஒதுக்கி விடுகிறோமா இல்லையா?

● ஜாதி உறவுகளின் அவமதிப்புக்கு உள்ளாகிவிடக் கூடாது என்பதற்காக அரிவாளைத் தூக்குவது அறிவுடைமையா? உங்கள் வாழ்க்கை தேவைகளுக்கு நெருக்கடிகள் வந்தால் ஜாதி உறவுகள் ஓடிவந்து உதவுமா?

● மருத்துவர்கள் தங்கள் ஜாதிக்குள் மட்டுமே மருத்துவம் பார்ப்போம் என்று கூறுவார்களா? பொறியாளர்கள் தங்கள் ஜாதிக்கு மட்டுமே சேவை செய்வோம் என்று அறிவிப்பார்களா? வணிகர்கள் தங்கள் பொருட்களை சொந்த ஜாதிக்காரர்களுக்கு மட்டுமே விற்பனை செய்வோம் என்று கூறுவார்களா? அங்கெல்லாம் எங்கே போகிறது ஜாதி?

● நம் வீட்டுப் பிள்ளைகள் தாங்கள் விரும்பிய வாழ்க்கைத் துணைவர்களைத் தேர்வு செய்கின்ற உரிமையை நாம் பறிக்கலாமா? நமக்கு அந்த உரிமையை யார் கொடுத்தது?

● நம் வீட்டுப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் அவர்கள் விரும்புவதை எல்லாம் மகிழ்ச்சியோடு வாங்கித் தருகிறோம். ஆனால் அவர்கள் விரும்புகிற வாழ்க்கையை மட்டும் நாம் மறுக்கிறோமே? இது அவர்களின் உணர்வுகளையும் அழிப்பதல்லவா!

● ஒரு ஆணவக் கொலை என்ன விளைவுகளை ஏற்படுத்துகிறது தெரியுமா? ஒரு குடும்பத்தின் உயிரைப் பறித்துவிடுகிறது. குற்றவாளிகளைச் சிறைக்கு அனுப்புகிறது. இரண்டு குடும்பங்களுமே பாதிப்புக்கு உள்ளாக்குகிறது இந்த ஜாதிவெறி.

● உலகத்திலேயே எந்த நாட்டிலாவது இப்படி ஜாதி என்ற அடையாளம் இருக்கிறதா?

● நமது பெருமைக்குரிய திருக்குறள், சங்க இலக்கியமானாலும் ஜாதியைப் பேசுகிறதா? காதலையும் வீரத்தையும் தானே நமது இலக்கியங்கள் பேசுகின்றன.

● கீழடி அகழ்வாய்வு என்ன கூறுகிறது? தமிழர்களாகிய நாம் மதம், கடவுள் என்று அடையாளம் இல்லாமல் வாழ்ந்தோம் என்ற வரலாற்றைத் தானே!.

● கடவுளுக்கு ஜாதி இருக்கிறதா? நீங்கள் ஜாதியைப் புறக்கணித்தால் கடவுள் உங்களை தண்டித்து விடுவாரா? ஜாதிக்காக அரிவாள் தூக்கிக்கொண்டு ஓடுகிறவர்களை சட்டத்திலிருந்து கடவுள் காப்பாற்றி விடுவாரா?

● மதங்களை கடவுள் உருவாக்கினாரா? கடவுள் தோன்றிய காலத்தில் மதங்கள் வந்துவிட்டதா? கடவுள் முந்தியதா? மதம் முந்தியதா?

கடவுளுக்கும் ஜாதிக்கும் உறவுகளை உருவாக்கியது யார்? பார்ப்பனர்களின் வேத மதம்தான்! கடவுள் எங்கள் மந்திரத்துக்கு கட்டுப்பட்டது என்றார்கள்; கல்லாக செதுக்கப்பட்ட சிலைகளை கடவுளாக சக்தி பெறச் செய்வதும் வேத மந்திரம் என்றார்கள்; கடவுளுக்கு தெரிந்த மொழி எங்கள் சமஸ்கிருதம் மட்டும்தான் என்றார்கள்.

'பிராமணன்' பிரம்மா தலையில் பிறந்ததாகவும், சூத்திரர்கள் அதே கடவுளின் காலில் பிறந்ததாகவும் சொல்கிறார்கள்; நாமெல்லாம் சமமில்லை வெவ்வேறு ஆட்களப்பா, நாம் ஒன்றாக கலந்து விடக்கூடாது; இதுவே கடவுள் கட்டளை என்றார்கள்.

ஆனாலும் என்ன நடந்தது? வெவ்வேறு வர்ணங்களுக்கு இடையே கலப்பு நடந்தது வர்ணக் கலப்பில் பிறந்த குழந்தைகளை எந்த வர்ணத்தில் சேர்ப்பது என்ற கேள்வி எழுந்தது. கலப்பில் பிறந்தவர்களுக்காகவே தனித் தனி ஜாதிகள் வந்தன. ஜாதியே கலப்பில் பிறந்ததுதான்.

நாம் அறிவியல் உலகத்தில் வாழ்கிறோம்.
மனித மரபணுக்கள் மாற்றி அமைக்கப்படுகின்றன.
வெவ்வேறு ஜாதியினரிடம் இருந்து பெற்ற விந்துக்களைக் கொண்டு குழந்தைகளை சோதனைக் குழாய் முறைகளில் பிறக்கச் செய்கிறோம்.

ஆனாலும் ஜாதியையும் ஜாதிவெறியையும் கைவிட மறுக்கிறோம் எனவே தான் கூறுகிறோம்:

***மனிதம்-நமது அடையாளம்***
***ஜாதி- நமக்கு அவமானம்!***
***மடியட்டும் ஆணவப் படுகொலைகள்!***

# ஆணவப் படுகொலை: முகநூல் குழப்பவாதிகளுக்கு பதில்

ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க முதன்மைப் பணியாக நாம் கையில் எடுக்க வேண்டியது ஜாதியின் கேடுகள் குறித்தும், ஜாதி ஒழிப்பு குறித்தும் மக்களிடம் பரப்புரை செய்வதா? அல்லது ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம் மட்டும் நிறைவேற்றினால் போதும் என்று கோரிக்கை வைத்து விட்டு, ஜாதி எதிர்ப்பு இயக்கங்களை நடத்தாமல் ஒதுங்கிகொள்வதா? ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம் வேண்டாம் என்றும் அப்படி ஒரு சட்டம் தேவையில்லை என்றும் யாரும் இங்கு சொல்லவில்லை.

ஆனால் அதே சமயம் அதைவிட முக்கியமானது ஜாதிய மனநிலையில் இருக்கும் இந்த சமூகத்தில் நேரடியாக மக்களிடம் சென்று ஜாதி என்கிற கட்டமைப்பு எந்த அளவிற்கு சமூகத்தை தனிமனிதர்களை மனிதத் தன்மையற்றவர்களாக மாற்றி வைத்திருக்கிறது? அது சக மனிதர்களை எவ்வாறு பிளவுபடுத்தி இருக்கிறது? சக மனிதன் மீது எந்த காரணமும் இன்றி வெறுப்பை விதைத்து இருக்கிறது? சக மனிதனை தன்னைவிட கீழானவன் என்று நம்பவைத்து இருக்கிறது? என்பதை எடுத்துச் சொல்லி அந்த மனநிலையில் இருந்து அந்த மக்களை வெளியேற்றச் செய்யும்படியான பிரச்சாரங்களை செய்வதுதான். கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் "ஜாதி ஒழிப்புப் பரப்புரைகளை நாம் பிற்படுத்தப்பட்ட ஆதிக்க சமூகத்தினர் வாழும் பகுதிகளில்தான் பரவலாக எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது" என்று குறிப்பிடுவார்.

அந்த வழியில்தான் திராவிடர் விடுதலைக் கழகம் தன்னுடைய பரப்புரைகளைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லி வருகிறது. ஜாதிய ஏற்றத்தாழ்வுகள், ஜாதிய வன்கொடுமைகள், ஜாதி ஆணவப் படுகொலைகள் நடக்கும் போதெல்லாம் அதற்கு எதிரான போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களை கழகம் நடத்தி அதன்மூலம் ஜாதி எனும் படிநிலை அமைப்பு ஏற்படுத்தும் பாதிப்புகளை மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்லியே வருகிறோம். இந்தப் பரப்புரைகளில் பல இடங்களில் ஜாதியவாதிகளின் எதிர்ப்பையும், ஒரு சில இடங்களில் தாக்குதல்களையும் கழகம் சந்தித்திருக்கிறது. தொடர்ந்து துணிச்சலுடன் மக்கள் மன்றத்தில் ஜாதிய வன்கொடுமை குறித்து கழகம் பேசிக்கொண்டு இருக்கிறது. இப்பொழுதும் அதற்கானப் பரப்புரை நடந்து கொண்டுதான் இருக்கிறது.

சமூக சிக்கல்களுக்கு பொது சிந்தனையில் இருக்கும் தீர்வுகளை விட தனித்த பார்வையுடன் தீர்வுகளைச் சொன்னவர் பெரியார். பிரச்சனையின் மூலத்தை கண்டறிந்து அதை தாக்குவதன் மூலம்தான் நிரந்தரத் தீர்வை அடைய முடியும் என்று அறிவியல் பார்வை உடையவர். அந்த வகையில் பெரியார் ஜாதிக்கு அடிப்படையான இந்து மதம், இந்து மதத்தை நிலை நிறுத்திக் கொண்டிருக்கும் சடங்குகள், சம்பிரதாயங்கள் அவற்றிற்கு காரணங்களை கற்பிக்கும் வேத புராணம், இதிகாசங்கள் இவற்றையெல்லாம் பொதுமக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்புக்கிடையே தொடர் பிரச்சாரங்களின் மூலம் அம்பலப்படுத்தினார்.

பெரியார் கூறுகிறார்: **"சாதிகள் ஒழியவேண்டுமென்றால், இந்துமதம் அழிக்கப்படவேண்டும். இந்துமதத்திற்கு ஆதாரமாகவும் அடிப்படையாகவும் இருக்கிற கடவுள்களையும், சாஸ்திர புராணங்களையும் ஒழித்துக்கட்ட வேண்டும். அப்படியில்லாமல், வருணாசிரமம் இருக்க வேண்டமென்று சொல்லிக்கொண்டு, சாதிகளும் ஒழிய வேண்டுமென்று யாராவது சொன்னால் ஒன்று அவர்கள் பித்தலாட்டக்காரர்களாக இருக்கவேண்டும் அல்லது முட்டாள்களாக இருக்கவேண்டும்".**

-விடுதலை – 30.5.1951

ஜாதி ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம் என்பது ஒரு குற்றம் நடந்த பின் குற்றவாளிக்கு வழங்கப்படும் கடும் தண்டனையை உறுதி செய்கிறது. கூடுதலாக குற்றத்திற்கு துணை நின்றவர்களையும் இந்தச் சட்டத்தின் மூலம் தண்டிப்பதற்கு வழிவகை செய்கிறது. எனவே சட்டம் தேவையே! ஆனால் குற்றமே நடக்காத அளவிற்கு மக்கள் மனதில் மாற்றங்களை விதைப்பதற்கு நாம் மேலே சொன்ன ஜாதியைக் காப்பாற்றும் கடவுள், புராண இதிகாசங்கள், பழக்க வழக்கங்கள், சடங்கு, சம்பிரதாயங்களை கேள்விக்கு உள்ளாக்கும் பணியை முதன்மைப் பணியாக செய்வது இந்திய ஒன்றியத்திலேயே பெரியார் இயக்கங்கள்தான்; கருப்பு சட்டைக்காரர்கள் தான்.

திராவிடர் விடுதலைக் கழகம் இன்றுவரை தெருத்தெருவாக மக்களைச் சந்தித்து ஜாதியைக் காப்பாற்றும் அனைத்துக் கூறுகளையும் அம்பலப்படுத்தி பேசி வருகிறது. ஆணவப் படுகொலைக்கு எதிராக கழகம் கடந்த ஆண்டுகளில் செய்த பணிகளில் சிலவற்றை கீழே இணைப்பில் கொடுத்துள்ளோம்.

- ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு சட்டம் இயற்றுக! சென்னையில் கூடிய தலைமைக்குழுவில் முடிவு (26.09.2024)
- ஆணவப் படுகொலைகளை தடுக்க தனிச்சட்டம் தேவை ஓமலூரில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் (17.10.2024 )
- சென்னையில் ஆணவப் படுகொலை கண்டித்து ஆர்ப்பாட்டம்! 01.03.2024
- ஜாதி ஆணவப் படுகொலைச் சட்டம் கோரி கள்ளக்குறிச்சியில் கழகப் பரப்புரைப் பயணம் ( 02.06.2022 )
- ஜாதி ஆணவப் படுகொலைகளைக் கண்டித்து கோவையில் கழகம் ஆர்ப்பாட்டம் (08.08.2019)

கட்டுரையின் நீளம் கருதி சிலவற்றை மட்டும் இங்கே பதிவு செய்துள்ளோம். கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக முகநூலில் ஒரு பதிவை செய்கிறார். அந்தப் பதிவை முழுமையாக படிக்காமல் அல்லது படிக்க விரும்பாமல் மேலே இருக்கும் இரண்டு வரிகளை மட்டும் எடுத்துக் கொண்டு ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான சட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழகம் எதிராக இருப்பதுபோல ஒரு தவறான பரப்புரையை ஒரு சிலர் சமூக ஊடகங்களில் பதிவு செய்திருக்கிறார்கள்.

அவதூறுகளையும் வசைச் சொற்களையும் கடந்துதான் பெரியார் தன் பிரச்சார பலம், போராட்ட வலிமை ஆகியவற்றின் மூலம் மக்களை சிந்திக்க வைக்கவும், அதன்மூலம் மக்கள் மனதில் சிந்தனை மாற்றத்தையும், இந்த சமூக மாற்றத்திற்காக பல சட்டங்கள் வரவும் காரணமாக இருந்தார். பெரியாரின் அடியொற்றி பயணிக்கும் திராவிடர் விடுதலைக் கழகம் அதே பணியில் இதுபோன்ற வசைச் சொற்களையும் அவதூறுகளையும் கடந்து ஜாதி ஒழிந்த ஒரு சமத்துவச் சமூகத்தைப் படைக்க மக்கள் மனதில் மாற்றத்தைக் கொண்டு வரத் தொடர்ந்து களத்தில் மக்கள் முன்நின்று தெருவில் எங்கள் தோழர்கள் பரப்புரை செய்து கொண்டே இருப்பார்கள். பெரியார் போட்ட பாதையில் எங்கள் பயணம் தொடரும்.

**பரிமளராசன்,**
**சமூக ஊடகப் பொறுப்பாளர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்.**
*04.08.25*

# ஆணவப் படுகொலை சட்டம் வரட்டும்; ஆனாலும் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை தொடர வேண்டும்!

தடைச்சட்டம் என்று ஒன்று இல்லாத காரணத்தினால் தான், ஆணவப் படுகொலைகள் நடக்கிறதா? வன்கொடுமை தடுப்புச் சட்டம் இருந்தும் கூட ஜாதியக் கொடுமைகள் நின்று விட்டதா? சட்டங்களும் வரட்டும்! ஆனால் ஆணவப் படுகொலைகளுக்கு ஊற்று எது? ஜாதிய கட்டமைப்புதான்! ஜாதியக் கட்டமைப்பை மீறக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? இல்லை.

சமையலறை பெண்களுக்கே உரிமையானது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? இல்லை. சட்டங்கள் ஏதும் இல்லாமலே, இவைகள் கண்டிப்பாக வாழ்க்கையின் சட்டங்களானது எப்படி?

**ஆணவக் கொலையில் முதல் குற்றவாளியாக கூண்டில் ஏற்ற வேண்டியது ஜாதியையும் ஜாதி வெறியையும் தான்!**

பிறப்பின் அடிப்படையில் விலையில்லாமல் கிடைக்கிறது ஜாதி. அந்த விலையில்லா பொருளுக்கு மதத்தின் முதலீடுகள் இருக்கின்றன.இவை புரிந்துணர்வு ஒப்பந்தம் இல்லாமலே கிடைக்கின்ற முதலீடுகள்! மனுதர்மம், பகவத்கீதை, சாஸ்திரம், ஆகமம், வேதம், ராமாயணம், இதிகாசங்கள், சம்பிரதாயங்களில் இருந்து இந்த முதலீடுகள் வருகின்றன!

பிறப்பின் அடிப்படையில் விலையில்லாமல் கிடைக்கும் ஜாதியை இந்த முதலீடுகளே இயக்கிக் கொண்டிருக்கின்றன. ஜாதியப் படிநிலைகளை கட்டமைக்கின்றன. சமூகத்தைச் சீரழிக்கும் இந்த முதலீடுகளின் அதிகாரங்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்று பெரியாரும் அம்பேத்கரும் போராடினார்கள்.

ஜாதி அடையாளம் இல்லாத ஒரு இந்து கூட இங்கே பிறப்பதில்லை. மக்களை ஜாதி என்ற சிறைக்குள் இந்து மதம் அடைத்து வைத்திருக்கிறது. இதிலிருந்து மக்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதுதான் இப்போதுள்ள வழக்கு, இதில் முதல் குற்றவாளிகள் ஜாதியும் மதமும்தான். ஜாதியையும் தீண்டாமையையும் மதத்திலிருந்து விலக்க வேண்டும் என்பதே நமது கோரிக்கை! இந்த வழக்கை மக்கள் மன்றத்தின் முன் வைப்போம்! நியாயம் கேட்போம்!

**– விடுதலை இராசேந்திரன், முகநூல் பதிவு**

# உபா சட்டம் தேவையா?

2018–2022 வரையிலான காலகட்டத்தில் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் (UAPA) சட்டத்தில் 8947 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் வெறும் 252 பேர் மட்டுமே தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் நாடாளுமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக பதிலாக அளித்த பதிலில்,

**2018 – 1,421 பேர்**
**2019 – 1,948 பேர்**
**2020 – 1,321 பேர்**
**2021 – 1,621 பேர்**
**2022 – 2,636 பேர்**

கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். அதிகபட்சமாக ஜம்மு காஷ்மீரில் 2,633 பேரும், உத்தரப்பிரதேசத்தில் 2,162 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 252 பேர் மட்டுமே தண்டிக்கப்பட்டுள்ளனர். அமலாக்கத்துறையை வைத்து எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதைப் போல, உபா சட்டத்தை வைத்து சமூக ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்களை ஒடுக்கிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. இச்சட்டத்தின் தேவையை கேள்விக்குள்ளாக்குகிறது இந்த புள்ளி விவரங்கள்.

# திருப்பூரில் ஜாதி எதிர்ப்பு பரப்புரை

**மனிதம் நமதுஅடையாளம்!**
**ஜாதி நமக்கு அவமானம்!** என்ற தலைப்பில் தெருமுனைக் கூட்டங்களை திருப்பூர் மாவட்டக் கழகம் நடத்தவுள்ளது.

12.08.2025 செவ்வாய்க்கிழமை: அருள்புரம் மற்றும் பொங்கலூர் பகுதியில் மாலையில் நடைபெறும். 13.08.2025 புதன்கிழமை: பல்லடம் பகுதியிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறும்.

# சட்டத்தில் ‘கடவுள்’ சொல்லை இணைக்க மறுத்த அம்பேத்கர்

**- ம.கி.எட்வின் பிரபாகரன்**

***“அம்பேத்கரின் முகப்புரை: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் இரகசிய வரலாறு” எனும் தலைப்பில் ஆகாஷ் சிங் ரத்தோ எழுதிய ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பை ‘எதிர் வெளியீடு’ வெளியிட்டுள்ளது. இந்த நூலை திறனாய்வு செய்து ம.கி எட்வின் பிரபாகரன் ஜூலை 12.07.2025 அன்று நடைபெற்ற 28வது நிமிர்வோம் வாசகர் வட்டத்தில் நிகழ்த்திய உரையின் சுருக்கம்:***

அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை (preamble) எழுதியது யார்? என்ற கேள்விக்கு விடையளிக்கும் விதமாக, ஆய்வாளர் ஆகாஷ் சிங் ரத்தோர் ஆங்கிலத்தில் எழுதிய *Ambedkar’s preamble: A secret history of the constitution of India* என்ற புத்தகத்தை, எழுத்தாளர் ச.வின்சென்ட் தமிழில் மொழிபெயர்த்து, "அம்பேத்கரின் முகப்புரை: இந்திய அரசமைப்புச் சட்டத்தின் இரகசிய வரலாறு" எனும் பெயரில் நூலாகக் கொண்டு வந்துள்ளார். சந்தர்ப்பசாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு, வேறு யாரும் இதனை எழுதியிருக்க வாய்ப்பில்லை என்பதை நிறுவுவதற்கான தரவுகளையும் மேற்கோள்களையும் தொகுத்தளித்து, அதன்மூலம் அம்பேத்கர்தான் முகப்புரையை எழுதினார் என்பதை நிறுவியுள்ளார்.

இந்திய அரசியலமைப்பை உருவாக்கும் போது, அரசியலமைப்புச் சபைக்கு வழிகாட்டும் ஆவணமாக, நேரு குறிக்கோள்கள் தீர்மானத்தை(1946) முன்மொழிந்தார். 1947-இல் அவையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த தீர்மானத்திற்கும், பின்னாளில் அம்பேத்கர் எழுதிய முகப்புரைக்கும், நிறைய பொருத்தங்கள் உண்டு. நேருவின் தீர்மானத்திலும் அம்பேத்கரின் முகப்புரையிலும், பலச் சொற்கள் ஒன்றாகவே இருப்பதைக் காண முடிகிறது. Sovereign republic (இறையாண்மை கொண்ட குடியரசு), மக்கள் (அதிகாரம், சக்தி), நீதி (சமூகப் பொருளாதார, அரசியல்), சமத்துவம் (அந்தஸ்து, வாய்ப்பு), சுதந்திரம் (சிந்தனையிலும், அதனை வெளிப்படுத்துவதிலும், நம்பிக்கையிலும், வழிபாட்டிலும்) ஆகிய சொற்கள் அப்படியே பொருந்திப் போகின்றன.

இவற்றுள் "சமவாய்ப்பு" என்ற சொல்லை, பெரியார் தன் எழுத்தில் "சமஅனுபவம்" என்ற சொல்லின் மூலம் குறித்துள்ளார். பொதுவுடைமையா சமஅனுபவமா?, பொதுவுடைமையா? ஜாதி ஒழிப்பா? எதற்கு முன்னுரிமை தர வேண்டும்? எனும் கேள்வி எழுந்த பொழுது, பெரியார் சமஅனுபவத்தின் பக்கமும், ஜாதி ஒழிப்பின் பக்கமும் நின்றார். அதேபோல நம்பிக்கையிலும் வழிபாட்டிலும் முழுச்சுதந்திரம் என்ற போர்வையில் சூத்திரர்கள் இழிவு செய்யப்படுவதால் பெரியார் இயக்கம் சட்டத்தின் மத சுதந்திரப் பிரிவை ஏற்றுக்கொள்வதில்லை. அதனால்தான் ஜாதியைப் பாதுகாக்கும் சில சட்டப்பிரிவுகளை, பெரியார் தொண்டர்கள் தீயிட்டுக் கொளுத்தினர்.

> **‘நான் கேட்டுக்கொள்ளப்பட்டதைச் செய்தேன், என்னுடைய விருப்பத்திற்கு எதிராக நான் வாடகை குதிரையாக பயன்படுத்தப்பட்டேன்; My Pen was Moved by Brahmins, I did much against my Will என்றார். அரசியலமைப்புச் சட்டம் என்னுடையதல்ல, அரசியலமைப்புச் சட்டம் பேய்கள் குடியிருக்கும் அழகான கோயில். அதை எரிக்கும் முதல் ஆளாக நான் தான் இருப்பேன்’ என்று கடுமையாகச் சாடினார்.**
>
> **- அம்பேத்கர்**

சட்டத்தில் ‘மதச்சார்பின்மை’ என்ற சொல் இடம்பெறவில்லை இந்திரா காந்தி அவசரநிலை காலத்தில்தான் அது சேர்க்கப்பட்டது என்று சங் பரிவாரங்களும் ஒன்றிய அமைச்சர்களும் இப்போது பேசுகிறார்கள். எனவே அரசியல் சட்டத்தில் இருந்து “மதச்சார்பின்மை, சோசலிசம்” என்ற சொற்றொடர்கள் நீக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்கள். சட்டத்தின் நோக்கம் மதச்சார்பின்மையையும் சோசியலிசத்தையும் வலியுறுத்துவது தான். இதற்கு அரசியல் சட்ட அவையில் நடந்த விவாதங்கள் சான்றுகளாக இருக்கின்றன.

“எல்லாம் வல்ல கடவுள் பெயரால்” என்ற சொற்றொடரை சட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று ஷிபான்லால் சன்சேனா வலியுறுத்தினார். “முதன்மை உயிரான பரமேஸ்வரன்” என்றச் சொல்லை சட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கோவிந்த் மாளவியா வற்புறுத்தினார். இந்த இரண்டு கருத்துகளையும் அம்பேத்கர் ஏற்க மறுத்துவிட்டார். அரசியல் சட்டத்திற்குள் கடவுளுக்கோ மதத்துக்கோ இடமில்லை என்று மறுத்து இது மதச்சார்பற்ற தேசம் என்பதை அம்பேத்கர் உறுதிப்படுத்தினார்.

அதேபோல் சோசியலிசம் என்பதும் சட்டத்தில் இடம்பெறவில்லை. இதற்கும் அரசியல் சட்ட குழுவில் நடந்த விவாதங்கள் சான்றுகளாக நிற்கின்றன. நேரு கொண்டு வந்த பொருளாதாரம் பற்றிய தீர்மானத்தில் பொதுவுடைமை என்ற சொல் இடம் பெறவில்லை. அம்பேத்கர் இந்த தீர்மானத்தை கடுமையாக விமர்சித்தார். “சமூகப் பொருளாதார நீதியை நிலை நாட்டுவதற்கு தொழிற்சாலைகளும் நிலமும் தேசிய மயமாக்கப்பட வேண்டும். நேருவின் தீர்மானம் இதை வெளிப்படையாகவே கூறியிருக்க வேண்டும் அப்படி இந்த தீர்மானம் கூறாதது எனக்கு ஏமாற்றத்தை தருகிறது. எதிர்வரும் அரசின் கொள்கை சோஷலிச பொருளாதாரமாக இல்லாவிட்டால் சமூகப் பொருளாதார நீதிகளை எப்படி சாத்தியமாக்க முடியும்” என்று அம்பேத்கர் கேள்வி கேட்டார். இதன் மூலம் சோசியலிசமே சட்டத்தின் குறிக்கோள் என்பதை அரசியலமைப்பு அவையில் நடந்த இந்த வாதங்களும் உறுதிப்படுத்துகின்றன.

இந்தியா ஒற்றுமையை அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது. ஆனாலும் கூட இந்தியா ஒரு தேசமாக உருவாகவில்லை என்பதையும் அம்பேத்கர் அரசியலமைப்பு அவையில் தெளிவாக விளக்குகிறார். ஒற்றுமைப் பாதையில் மக்களை பயணிக்கச் செய்வதற்கு ஒவ்வொரு கட்சிக்கும் கடமை இருக்கிறது, ஒற்றுமைப் பாதையில் இணைய மறுப்பவர்களை இந்த பாதைக்கு திருப்பி கொண்டு வரும் ராஜதந்திர நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் எடுக்க வேண்டும். ஒற்றுமைக்கு உடன்பட மறுப்போரின் விருப்பு வெறுப்புகளை அங்கீகரிக்க வேண்டும் என்றார் அம்பேத்கர். ஒற்றுமைப் பாதையில் அழைத்து வருவதற்கான முயற்சிகளை அவர் வலியுறுத்துவது வழியாக இந்தியா இன்னும் ஒரே தேசமாக உருவாகவில்லை என்ற உண்மையை உறுதிசெய்தார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் அம்பேத்கர் புகுத்த நினைத்த, பல பகுத்தறிவுபூர்வமான மாற்றங்களை, ஏற்கும் பக்குவம் இந்தியச் சமூகத்துக்கும் அதன் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருந்த பார்ப்பனச் சனாதன சக்திகளுக்கும் இல்லை.

விரக்தியின் உச்சத்திற்கே சென்ற அம்பேத்கர் தன்னுடைய சட்ட அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். (1951). "நான் கேட்டுக்கொள்ளப்பட்டதைச் செய்தேன் என்னுடைய விருப்பத்திற்கு எதிராக; நான் வாடகை குதிரையாக பயன்படுத்தப்பட்டேன்; *My pen was moved by brahmins, I did much against my will,"* என்றார். மேலும், "அரசியலமைப்புச் சட்டம் என்னுடையதல்ல", "அரசமைப்புச் சட்டம் பேய்கள் குடியிருக்கும் அழகான கோயில். அதை எரிக்கும் முதல் ஆளாக நான்தான் இருப்பேன்" என்று கடுமையாகச் சாடினார். இன்றைக்கு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26ஆம் நாளை, அரசியலமைப்புச் சட்ட நாளாகக் கொண்டாடும் போது அரசமைப்புச் சட்டம் குறித்த அம்பேத்கரின் இந்த கருத்துகளையும் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் 1956-ல் இலட்சக்கணக்கான தொண்டர்களுடன் அம்பேத்கர் புத்தம் தழுவினார். பெரியாரையும் புத்தம் தழுவ அழைத்தார். மதம் மாறினால் இந்து மதத்தை விமர்சிக்ககூடிய அந்த வாய்ப்பை இழந்து விடுவோம் என்பதால், பெரியார் மதம் மாற மறுத்தார். அதே வேளையில், அம்பேத்கர் உள்ளிட்ட பலர் மதம் மாறுவதை பெரியார் ஆதரித்தார். அம்பேத்கர் மறைவுக்குப் பின், 1957 இல் அம்பேத்கர் சொன்னதை பெரியார் செய்தார். ஆம்! அரசியலமைப்புச் சட்டத்தில் ஜாதியைப் பாதுகாக்கும் சில உட்பிரிவுகளை, பெரியார் தொண்டர்களை வைத்து , தீயிட்டுக் கொளுத்தச்செய்தார். ஒருவேளை அம்பேத்கர் அப்போது உயிருடன் இருந்திருந்தால், அவரும் அரசியலமைப்புச் சட்ட எரிப்புப் போராட்டத்தில், பெரியாருடன் கைகோர்த்திருப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட தண்டனைச் சட்டத்தில், ஒருவர் தீண்டாமையைக் கடைபிடித்தால் எப்படி தண்டனைக்கு உள்ளாவாரோ அதேபோல, ஜாதியைக் கடைப்பிடித்தாலும் தண்டனைக்கு உள்ளாகும்படியான சட்டத்திருத்தங்களை மேற்கொண்டால் மட்டுமே, ஜாதியை முற்றுமுழுதாக அழிக்க முடியும் என்பது பெரியார் இயக்கப் பார்வை. அதற்கான வழிவகைகள் அரசியலமைப்புச் சட்டத்திலும் சேர்க்கப்பட வேண்டும் என்பதே நம் கோரிக்கை.

இந்தப் பார்வை ஒருபுறம் இருந்தாலும் கூட, இன்றைய அரசியல் சூழலில் நம்முடைய நிலைப்பாடு என்னவாக இருக்க வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது. இன்றைக்கு ஆர்எஸ்எஸ் பாஜக வலதுசாரி கும்பல்கள், அரசியல் சட்டத்தில் இருக்கக்கூடிய செக்யூலர், சோசியலிஸ்ட் ஆகிய இரண்டு சொற்களை நீக்குவதற்கு பல சதித்திட்டங்களைத் தீட்டி, அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வரும் நிலையில், அரசமைப்புச்சட்டத்தை எதிர்க்கிறேன் என்ற பெயரில், வலதுசாரிகள் செய்யும் செயலை நாமும் செய்ய முற்படுவது சூழலுக்குப் பொருந்தாது என்பதால், இன்றையச் சூழலில் அரசியலமைப்புச் சட்டத்தின் மீது நமக்கு விமர்சனங்கள் இருந்த போதிலும், அதிலுள்ள மதச்சார்பின்மையையும் பொதுவுடைமைச்சார்பையும் பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அந்த கடமையை கருத்தில் கொண்டு, ரத்தோர் சிங் எழுதியிருக்கும் இந்நூல், ஆழமான வாசிப்பிற்குரிய ஆவணமாகும்!"

“கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை” தொடர்
அடுத்த இதழில் வெளிவரும்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# அக்ரஹாரத் தடையை தகர்த்த கொக்கூர்

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை வெளிச்சப்படுத்தும் கட்டுரை தொடரை முரசொலியில் ர.பிரகாஷ் எழுதி வருகிறார். கொக்கூர் வரலாறு இது. கடந்த இதழின் தொடர்ச்சி...**

கொக்கூர் கிராமத்திற்குள் அக்ரஹாரம் வழியாகப் பெரியார் நுழைந்தபோது, அந்தத் தெருவில் பிறர் நுழையக் கூடாது என தடுக்கப்பட்டிருந்த தென்னை மரத் தடுப்புகள் தகர்த்து வீசப்பட்டன. பண்ணையார் ஐயர் குடும்பம் கதவைத் தாழிட்டுக்கொண்டது. மேல் சட்டையோடு, காலில் செருப்பு அணிந்துகொண்டு அக்ரஹாரத் தெருவுக்குள் ஐநூறுக்கும் மேற்பட்டோர் நுழைந்ததைக் கண்டு கொக்கூர் மக்கள் சுயமரியாதை உணர்வு பெற்றனர். அங்கிருந்து அரை கிலோ மீட்டருக்கு அப்பால்தான் கூட்டம் நடைபெற்றது. ஆனால் பெரியாரின் பேச்சை ஐயர் கேட்க வேண்டுமென்று அக்ரஹார முனையில் ஒலிபெருக்கி அமைத்திருந்தனர்.

3 மணி நேரம் பெரியார் பேசினார். கொக்கூர் மக்களின் மூளைகளில் இடப்பட்டி ருந்த அடிமை விலங்கு அறுபட்டது. அதன்பின்னர்தான் எல்லோரும் கல்வி கற்றனர். அக்ரஹாரத் தெருவுக்குள் அனைவரும் துணிந்து செல்லத் தொடங்கினர். சிறுவனாக இருந்த பெரியாரியவாதி குஞ்சிதபாதம் அப்பகுதியின் திராவிடர் கழகத் தலைவரானார். முருகையன் செயலாளரானார். சுந்தரேசன் பொருளாளரானார்.

1957-இல் பெரியார் அறிவித்த சட்ட எரிப்புப் போராட்டத்தில் கொக்கூரில் இருந்து 4 பேர் பங்கேற்றனர். காவல்துறை கைது செய்யாததால், அதிருப்தி அடைந்து குத்தாலத்திற்குச் சென்று மீண்டும் கொளுத்தினர். இதே காலகட்டத்தில் பெரியாரியவாதி குஞ்சிதபாதத்தின் சகோதரர் கோவிந்தசாமி சிங்கப் பூரில் இருந்தார். மாதிரிமங்கலம் என்.டி. சாமியின் மனைவியின் சகோதரரான வீரையன் அப்போது சிங்கப்பூரில் திராவிடர் கழகத் தலைவராக இருந்தார். வீரையனே தேடிச்சென்று கோவிந்தசாமியைச் சந்தித்து திராவிடர் கழகத்தில் இணைத்தார்.

1959-இல் கோவிந்தசாமி கொக்கூர் திரும்பினார். அவரும் இந்தி எழுத்துக்கள் அழிப்பு, அஞ்சலக மறியல் என பல போராட்டங்களில் பங்கெடுத்து, சிறைக்குச் சென்றார். தீவிர கடவுள் பக்தியாளரான கோவிந்த சாமியின் அம்மா சிவபாக்கியத் தம்மாள் பகுத்தறிவாளராகி, கறுப்புப் புடவையுடன் நிகழ்ச்சிகளில் பங்கேற்கத் தொடங்கினார். அவரோடு மற்ற பெண்களும் வரத் தொடங்கினர். அந்த ஊரில் யார் இறந்தாலும், இறுதி ஊர்வலம் மேற்கு நோக்கித்தான் செல்லும். ஆனால் சிவபாக்கியத் தம்மாளுக்கு 1979-இல் உடல்நலம் குன்றியபோது, தனது உடலை கிழக்கு நோக்கி எடுத்துச் செல்லுங்கள் என்றார். கிழக்கே, அக்ரஹாரத் தெரு வழியாக எடுத்துச் செல்லுங்கள் என்பதைத்தான் அப்படிச்சொன்னார். அதன்படியே இறுதி ஊர்வலம் நடந்தது.

பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகி பெரியாரைச் சந்தித்த பின்பு, கொக்கூரில் உள்ள வீடுகள் எங்கும் தி.மு.கழகக் கொடியும் பறக்கத் தொடங்கியது. அங்கிருந்து 1 கிலோ மீட்டரில்தான் முன்னாள் அமைச்சர் கோ.சி.மணியின் வீடு இருந்தது. கொக்கூர் கொள்கைவாதிகளோடு மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தார் கோ.சி.மணி.

முருகையன் இருமுறையும், கோவிந்தசாமி ஒரு முறையும் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தனர். கொக்கூரில் 100% எல்லோரும் படித்துவிட்டனர். எண்ணற்ற ஜாதி மறுப்புத் திருமணங்கள் நடக்கின்றன. முதல் சுயமரியாதைத் திருமணமே முருகையன் திருமணம்தான். அது அண்ணா ஆட்சிக்கு வருவதற்கு முன்பே நடந்தது.

கொக்கூர் கழ(ல)கக்காரர்களின் வாழும் சாட்சியமாக முருகையன் இன்றும் இருக்கிறார். ஆனால், பார்ப்பனர்கள் ஒருவர் கூட இப்போது அங்கே இல்லை. யாருக்கும் யாரும் ஆதிக்கம் இல்லை என பெரியாரியச் சிந்தனையில் ஊறிய கருப்பு-சிவப்பாக இன்றும் அந்த ஊர் காட்சியளிக்கிறது.

# விநாயகர் ஊர்வலத்தில் விதிமீறல்களை தடுக்க மனு

**கோவை:** விரைவில் வர இருக்கும் விநாயகன் ‘அரசியல்’ ஊர்வலத்தில் விதிமீறல்களைத் தடுப்பதற்கான முயற்சியாக நீதிமன்ற ஆணைகளை சரியாகப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தி திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கோவை மாநகர வடக்கு துணை காவல் ஆணையர், கோவை மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் ஜீலை 28 அன்று மனு அளிக்கப்பட்டது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு பதிவு அஞ்சலில் மனு அனுப்பப்பட்டது.

தோழர்கள் நிர்மல் குமார், வெங்கடேசன், கிருஷ்ணன், ஸ்டாலின், மாதவன், நவீன் கலந்து கொண்டனர்.



**கடலூர்:** விரைவில் வர இருக்கும் விநாயகன் ‘அரசியல்’ ஊர்வலத்தில் விதிமீறல்களைத் தடுப்பதற்கான முயற்சியாக நீதிமன்ற ஆணைகளை சரியாகப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தி திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கடலூர் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கடலூர் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 1.8.25 அன்று பெரியார் சிவா தலைமையில் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

வழக்கறிஞர் இள.புகழேந்தி( திமுகவின் தேர்தல் பணி குழு செயலாளர்), வழக்கறிஞர் தி.ச.திருமார்பன் (விசிக மாநில அமைப்புச் செயலாளர்) பாலு (மக்கள் அதிகாரம் மாநில தலைமை குழு உறுப்பினர்), தோழமை அமைப்புகள் கலந்துக் கொண்டனர்.

# ஆணவப் படுகொலையை கண்டித்து கோவையில் தெருமுனைக் கூட்டம்




“மடியட்டும் ஆணவப் படுகொலைகள் மனிதம் நம் அடையாளம் - ஜாதி அவமானம்” என்ற தலைப்பில் மாதவன் தலைமையில் கோவை மாவட்டக் கழகம் சார்பில் உக்கடம் வள்ளியம்மை பேக்கரி முன்பு மாலை 5 மணிக்கு தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.

தெருமுனைக் கூட்டத்தில் ஜாதி ஆணவப் படுகொலைகள் உள்ளிட்ட ஜாதிய கொடுமைகளுக்கு காரணமானவற்றைப் பற்றி மக்கள் மத்தியில் எடுத்துரைக்கப்பட்டது.

வழக்கறிஞர் வெண்மணி(திராவிட தமிழர் கட்சி), இளவேனில் (தமிழ்ப் புலிகள் கட்சி) மலரவன்(புஇமு), கா.சு.நாகராசு (திராவிட இயக்க தமிழர் பேரவை), மு.இனியவன் (மத்தியக் குழு உறுப்பினர், சிபிஐ (மா லெ) ரெட் ஸ்டார்) ப.மாணிக்கம் (விசிக) உள்ளிட்ட தோழமை அமைப்பு தோழர்கள் கலந்து கொண்டனர்.

# வேலுபிரபாகரன் நினைவேந்தல் நிகழ்வு



சென்னை சாலிகிராமம் பிரசாத் லேப்பில் 27.07.25 அன்று இயக்குனர் வேலு பிரபாகரன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இனமுரசு சத்யராஜ் சிறப்புரையாற்றினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தபெதிக பொதுச் செயலாளர் கோவை இராமகிருஷ்ணன், ப்ளூ சட்டை மாறன், இயக்குனர் கதிர், திக பொருளாளர் வீ.குமரேசன், பாடகர் அந்தோணி தாசன், இயக்குனர் அகரன் உள்ளிட்ட பலரும் இயக்குனர் வேலு பிரபாகரனுடனான தங்கள் நினைவலைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இரா. உமாபதி (திவிக சென்னை மாவட்டச் செயலாளர்), சேத்துப்பட்டு இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத் தலைவர்) , ம.கி.எட்வின் பிரபாகரன் (தென்சென்னை மாவட்ட அமைப்பாளர்), கோபி (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்) உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இயக்குனர் சங்ககிரி ராஜ்குமார் ஒருங்கிணைத்தார்.

# மேச்சேரியில் "பெரியார் எனும் பெருநெருப்பு" கருத்தரங்கம்!




சேலம் மாவட்ட இளைஞர் அணியின் சார்பில் 03.08.2025 ஞாயிறு மேச்சேரி VGP மஹாலில் கருத்தரங்கம் நடைபெற்றது. சிவ சண்முகம் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) தலைமையில் நடைபெற்றது.

சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் தங்கதுரை, வெற்றிமுருகன், திவாகர், மற்றும் ஏற்காடு தேவபிரகாஷ் (சேலம் மாவட்ட இளைஞர் அணித் தலைவர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பிரபாகரன்(மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்) வரவேற்புரையாற்றினார்.

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜன் பகுத்தறிவு பாடல்களைப் பாடினார்.

U2Brutus தோழர்கள் மைனர் மற்றும் சத்யாவின் அரசியல் அரட்டை நடைபெற்றது.

"மீண்டும் நடிகர்" எனும் தலைப்பில் பேரலை மில்ட்டன், "மாடல்ல மற்றை யவை" எனும் தலைப்பில் U2Brutus மைனர், "நாக்பூர் ஏஜெண்டுகள்" எனும் தலைப்பில் இந்திரகுமார் தேரடி அவர்களும் கருத்துரை ஆற்றினார்கள். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

கவியரசு (தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்) நன்றி கூறினார். கிருஷ்ணன் (சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) கருத்தரங்கத்தை ஒருங்கிணைத்திருந்தார். நிகழ்வில் கழகத் தோழர்கள், பொதுமக்கள், மாற்று அரசியல் கட்சியினர், இயக்கத் தோழர்கள் என திரளாக கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : August 07, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran